**கவனிக்க.-** *19.08.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1721 - 2011 අගෝස්තු මස 26 වැනි සිකුරාදා - 2011.08.26

*1721 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1092 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1090 | ஏல விற்பனைகள் | 1096 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1090 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
கொழும்பு 8,
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**அரசாங்க தகவல் திணைக்களம்**

பாவனைக்கு உதவாத பொருட்களை பொது ஏலத்தின் மூலம் விற்பனைக்கு விடுதல்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் பாவனைக்கு உதவாத பின்வரும் பொருட்கள் 2011, செத்தெம்பர் மாதம் 6 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10.30 மணிக்கு பொல்ஹேன்கொடையில் அமைந்துள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தில் பொது ஏலவிற்பனைக்கு விடப்படும்.

(1) பல்வேறு வகையான இரும்புக் கதிரைகள்
(2) பல்வேறு வகையான இரும்பு மேசைகள்
(3) இரும்பு அலுமாரி
(4) இரும்பு கபட்
(5) பல்வேறு வகையான ராக்கைகள்
(6) பிரதி எடுக்கும் இயந்திரம்
(7) பெக்ஸ் இயந்திரம்
(8) கணனி உபகரணங்கள்
(9) பயன்பாட்டுக்கு உதவாத கையடக்கத் தொலைபேசி/தொலைபேசி உபகரணம்
(10) மின்விசிறிகள்

பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க தகவல் திணைக்களம்.

அரசாங்க தகவல் திணைக்களம்,
இல. 163, கிருலப்பனை மாவத்தை,
பொல்ஹேன்கொடை,
கொழும்பு 5.
2011.08.11.

8-702

---

# ஆய விற்பனையும் குத்தகையும்

**வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத்தவறணைகள் குத்தகை விற்பனை - 2012**

2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்போது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இட்டு இடதுபக்கத்தின் மேல் மூலையில் தவறணையின் பெயரையும் இலக்கத்தையும் "............................................. இலக்க ............................. கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம் 2011.09.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்னர் வத்தளை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வத்தளை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடவேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஒகத்து 20 ஆந் திகதியன்று 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு விடும் நிபந்தனைக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2011.09.15 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் வத்தளை பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. குறிப்பிட்ட தினத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய விற்பனை பெறத்தவறும் தவறணைகள் ஏதுவுமிருப்பின் இவைகளுக்கான விற்பனை மீண்டும் 2011.11.14 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு வத்தளை பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

7. இது விடயமாக மேலதிக விபரங்களை வத்தளை பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
வத்தளை,
2011.08.03.

**அட்டவணை**

| இலக்கம் | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்பு பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | வத்தளை | திம்பிரிகஸ்யாய | 2011.09.15 - மு. ப. 10.30 | 7,260 |
| 2 | வத்தளை | உஸ்வெடகெய்யாவ | 2011.09.15 - மு. ப. 10.30 | 4,840 |
| 3 | வத்தளை | போபிட்டிய | 2011.09.15 - மு. ப. 10.30 | 7,260 |
| 4 | வத்தளை | மஹவத்த | 2011.09.15 - மு. ப. 10.30 | 6,050 |

8-672

---

## கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவுக்குள் கள்ளுத் தவறணைகளையும் பிறநாட்டு குடிவகைத் தவறணைகளையும் குத்தகைக்கு விற்றல் - 2012

மேற்படி அறிவித்தல் 1718 ஆம் இலக்க 2011.08.05 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாகியது. இருப்பினும் அதில் கீழ்வருமாறு திகதிகளில் திருத்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் :-

| தொடர் இல. | குத்தகை விற்பனைக்குரிய தவறணை | 1718 ஆம் இலக்க 2011.08.05 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் வெளியாகிய கேள்வி விலைகோரல் திகதிகள் | | திருத்தப்பட்ட கேள்வி விலைக்கோரல் திகதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | குத்தகைகளை விற்கும் திகதி | குத்தகைகளை மீண்டும் விற்கும் திகதி | குத்தகைகளை விற்கும் திகதி | குத்தகைகளை மீண்டும் விற்கும் திகதி |
| 01 | வட்டபுலுவ- 1 ஆம் இலக்க கள்ளுத் தவறணை | 2011.08.17 | 2011.10.13 | 2011.10.13 | 2011.11.22 |
| 02 | கொழும்பு வீதி- 1 ஆம் இலக்க பிறநாட்டு குடிவகைகள் தவறணை | 2011.08.18 | 2011.10.14 | 2011.10.14 | 2011.11.23 |

டி. எம். எஸ். பண்டார தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
கண்டி கங்கவட்ட கோரளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கண்டி கடவத்சத்தர கங்கவட்ட கோரளை,
2011.08.12.

8-703

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : சிற்றஸ் வெக்கேஷன்ஸ் எல்ரிடீ
கம்பனியின் இலக்கம் : பீபி 4780
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.07.26
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 53/3, கிறகரிஸ் வீதி, கொழும்பு 7

சிற்றஸ் வெக்கேஷன்ஸ் எல்ரிடீ இற்காகவும்
அதன் சார்பிலும் பி. டபிள்யு. கோர்ப்பரேட்
செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2011.08.03.

8-682

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : சிற்றஸ் சில்வர் எல்ரிடீ
கம்பனியின் இலக்கம் : பீபி 4776
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.07.25
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : இல. 53/3, கிறகரிஸ் வீதி, கொழும்பு 7

சிற்றஸ் சில்வர் எல்ரிடீ இற்காகவும்
அதன் சார்பிலும் பி. டபிள்யு. கோர்ப்பரேட்
செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2011.08.03.

8-683

## வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றின் கூட்டிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் கூட்டிணைத்தல் பற்றிய அறிவித்தலை இத்தால் தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : பாசிக்குடா பீச் ரிசோர்ட்ஸ் எல்ரிடீ
கம்பனியின் இலக்கம் : பீபி 4784
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2011.07.29
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் : ஐபிஎம் கட்டிடம், இல. 48, நவம் மாவத்தை, கொழும்பு 2

பாசிக்குடா பீச் ரிசோர்ட்ஸ் எல்ரிடீ இற்காகவும்
அதன் சார்பிலும் பி. டபிள்யு. கோர்ப்பரேட்
செக்ரட்டேரியல் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2011.08.03.

8-684

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2011, ஆடி 28 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : லகூன் பாம் பே ரிசோட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 80312
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : மோதரவெல, மாரவில

நிறுவனத்தின் முகாமையாளர்,

எச். டீ. சீ. டீ. விஜேசிங்க,
சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசு,
கம்பனிச் செயலாளர்கள்.

8-648

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்

*2011, வைகாசி 12 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர்* : கொமின்டோ டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 78828
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : 2 ஆம் மாடி, மெதடிஸ்ற் சென்ரல் கட்டிடம், இல. 252, காலி வீதி, கொழும்பு 3

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-649

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2011, ஆவணி 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : றோயல் எனர்ஜி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 80382
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 9ஏ, ஸ்ரீ சரணங்கர றோட், தெகிவளை

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-650

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2011, ஆவணி 05 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : சேல் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 80494
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 78, றொஸ்மிட் பிளேஸ், கொழும்பு 7

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-651

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2008, மார்கழி 31 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : ஜீ 3 சொலுஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 66650
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 16, சேர்கூலர் றோட், கல்கிஸ்ஸ

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-652

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2011, ஆவணி 01 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : இன்னொவேட்டிவ் ஃபுட் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 80374
*பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 50, சுவிசுத்தாராம றோட், கொழும்பு 6

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

8-653

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 11(5) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பழைய பெயர்* : மெல்ஸ்ட்டாகோர்ப் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் புதிய பெயர்* : மெல்ஸ்ட்டாகோர்ப் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 11755
*பதிவு முகவரி* : இல. 110, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு 10

8-655

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 8(2) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பழைய பெயர் : இன்வெஸ்ட்டர் எக்சஸ் ஏசியா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் புதிய பெயர் : ஏசியா கெப்பிட்டல் டெக்னொலொஜீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 1860
பதிவுத் திகதி : 2011.07.12
பதிவு முகவரி : இல. 21, மேற்கு கோபுரம், வேல்ட் ட்ரேட் சென்ட்டர், கொழும்பு

பணிப்பின்படி,

பீ. ஆர். செக்ரெடேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்.

8-677

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவிற்கு அமைய, இந்த அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. "சீபாங்க் அசெட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்" என பெயர் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவிற்கிணங்க 2011, ஓகத்து மாதம் 8 ஆந் திகதி முதல் "சீ பாங்க்" அசெட் மனேஜ்மென்ற் லிமிட்டெட்" என்று மாற்றப்பட் டுள்ளது :-

கம்பனியின் முன்னைய பெயர் : சீபாங்க் அசெட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 3326
கம்பனியின் புதிய பெயர் : சீபாங்க் அசெட் மனேஜ்மென்ட் லிமிட்டெட்
கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி : 3 ஆம் மாடி, இலங்கை வங்கி கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு 1

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கார்சன்ஸ் மனேஜ்மென்ட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2011, ஓகத்து 26.

8-681

---

## அற்றோணித் தத்துவப்பத்திரம் இரத்துச்செய்தல்

கண்டி எல்லியத்த, வேரபிடியவில் வசிக்கும் யமன்கெதர குணவதி அவர்களால் கண்டி, இல. 95, 10 ஆம் மைல்கல், மல்பான, கெங்கல்லையில் வசிக்கும் தயாலகஷ்மன் சந்திரதாச அவர்களுக்கு கண்டி, கெங்கல்ல, அஸ்வலபிட்டிய இல. 5 இல் வசிக்கும் சட்டத்தரணி வி. விமலவன் அவர்கள் முன்னிலையில் 2010.10.29 ஆந் திகதிய இல. 3251 கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் நிராகரிக்கப்பட்டதை இலங்கை வாசிகளுக்கு அறியத்தருகிறேன்.

யமன்கெதர குணவதி.

8-676

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கிறோம் :-

கம்பனியின் பெயர் : கிலன் சேவா பொது பதனம
கம்பனியின் பதிவு இலக்கம் : ஜீஏ 2556
பதிவுத் திகதி : 2011.06.07
பதிவு முகவரி : ஸாரானாத் பௌத்த நிலையம், இறப்பர் வத்த பாதை, கங்கொடவில, நுகேகொடை

கம்பனிச் செயலாளர்.

8-701

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நிட்டம்புவ, கொங்கஸ்தெனிய, கண்டி வீதி, 114 ஆம் இலக்கத்தில் வசித்த இப்போது அவுஸ்திரேலியா, விக்டோரியா, 3156, பர்ன்டிரி ஸ்கோர்ஸ்லி வீதி, 487 ஆம் இலக்கத்தில் வதியும் குருப்பு அப்புஹாமிலாகே தொன் துலிப் இந்திக குருப்பு ஆகிய நான், கொங்கஸ்தெனிய, கண்டி வீதி, இல. 114, குருப்பு அப்புஹாமிலாகே தொன் ஹிரந்தி லோச்சனா குருப்பு என்பவரின் பெயரில் 2007.01.08 ஆந் திகதிய 295 ஆம் இலக்க நாட்குறிப்பில் போலியோ 74, 349 ஆம் அத்தியாயத்தின் பதிவாளர் நாயகத்தால் பராமரிக்கப்படும் பதிவுப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ள கம்பஹா சட்டத்தரணி ஜீ. பீ. யூ. கே. வணிகசேகர என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2006.06.29 ஆந் திகதிய 3344 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்குகிறேன் என இத்தால் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் அறிவிக்கிறேன்.

கே. ஏ. டி. துலிப் இந்திக குருப்பு.

2011.07.18.

8-574

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பகிரங்க அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் 2011, யூலை 26 ஆந் திகதி முதல் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்

11(3) ஆம் பிரிவிற்கிணங்க மாற்றப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் நியதிகளின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது :-

*முன்னைய பெயர்* : பிறவுண்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் எல்ரீட
*புதிய பெயர்* : பிறவுண்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் பீஎல்சீ
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 66136பீபி
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : இல. 481, ட. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10

ஸ்டான்டர்ட் பினான்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2011, ஓகத்து 04.

8-579

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறோம் :-

*கம்பனியின் பெயர்* : இன்டெர்நஷனல் கோப்பரேட் சிகுரிடீஸ் அட்வைசஸ் அன்ட் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 80302
*பதிவுத் திகதி* : 2011.07.27
*பதிவு முகவரி* : இல. 60/14, 11 ஆம் ஒழுங்கை, அரலிய உயன, தெபானம, பன்னிபிட்டிய

8-587

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, நெலும் மாவத்தை, 362/15 ஆம் இலக்க ஸ்தானத்தைச் சேர்ந்த ஹெட்டிகே தோனா ராலிகா தமயந்தி ஆகிய என்னால் கம்பஹா பகிரங்க நொத்தாரிசு ஏ. டபிள்யூ. யூ. அனுபமா குணசேக்கர என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2010, ஓகத்து 10 ஆந் திகதிய 1 ஆம் இலக்கத்தைக் கொண்ட அற்றோணித் தத்துவம் மூலம் பண்டாரகம பெல்லன்துடால குருந்துவத்த, 85/1 ஆம் இலக்க ஸ்தானத்தில் வதியும் ரணசிங்க ஆராச்சிலாகே கங்காணி மல்லிகா (ஆ. அ. இல. 627870680V) என்பவருக்கு உரிமையை அளிக்கும் அற்றோணித் தத்துவ அட்டவணையில் 55 ஆம் தொடரில் 66 ஆவது பக்கத்தில் 5266 ஆவது நாட்குறிப்பு ஏட்டில் ஓகத்து 28 ஆந் திகதி பதியப்பட்ட மேற்கண்ட அற்றோணித் தத்துவம் இன்று தொடக்கம் செல்லுபடியற்றதாக்கப்பட்டு இரத்துச் செய்யப்படுகிறதெனவும் மேற்கூறப்பட்ட உரிமை பற்றி இனிமேற்பட மேற்கொள்ளும் எந்தவித கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இத்தால் பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் அறிவிக்கிறேன்.

ஹெட்டிகே தோனா நாலிகா தமயந்தி.

8-600

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பாக பகிரங்க அறிவித்தல்

ஆர் டி கே என் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

ஆர் டி கே என் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2011 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2 ஆந் திகதி பீவீ 80407 ஆம் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது கொழும்பு 3, அல்பிரட் ஹவுஸ் காடன் இல. 19 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

எம் அன்ட் என் ஏஜென்ஸ் அன்ட் செக்ரட்டறீஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

ஆர்டிகேஎன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்,
எம் அன்ட் என் கட்டிடம் (5 ஆம் மாடி),
இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 00300.

8-631

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகளைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : மட்டுப்படுத்தப்பட்ட எக்ஸீஸ் ஜப்பான் இம்போட்டர்ஸ் (தனியார்) கம்பனி
*பதிவு இலக்கம்* : பீவீ 78783
*முகவரி* : பேரகஸ் ஹந்திய வீதி, வென்னப்புவை

பணிப்பாளர்கள்,

திரு. டபிள்யூ. ஜே. ஜோசப் லோவ்,
திரு. டபிள்யூ. எச். பிலிஸியன் லோவ்,
திரு. டபிள்யூ. எம். க்ளரன்ஸ் லோவ்.

8-673

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்னர் சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1056 5001 6374-டீ. எம். எல். கே. தம்பிட்டிய மற்றும் ஆர். ஜீ. கே. எச். எம். ஏ. பீ. கருணாதிலக்க

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2008.02.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.08.28 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.08.19 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இருபத்துமூன்று இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்றறுபத் தொரு ரூபா அறுபத்துநான்கு சதம் (ரூ. 23,06,861.64) 2007, நவெம்பர் 22 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை இருபது இலட்சத்து அறுபத்திரண்டா யிரத்து நூற்றைம்பது ரூபா (ரூ. 20,62,150) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று வீத (13%) வருமதியாகவுள்ள வட்டி யுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள, இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவு பெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2011.09.16 ஆந் திகதி மு. ப. 10.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்குள் அம்பிட்டிய வீதி, அம்பிட்டிய, வோட் இல. 14 இன் அம்பிட்டியவில் அமைந்த "பட்டியகெலே எஸ்டேட் (ஒரு பகுதி)" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எம். எம். ஏ. விஜயகோன் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, திசெம்பர் 4 ஆந் திகதியிடப்பட்ட இல. 1224 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடகிழக்கிற்கு : வீதி ; தென்கிழக்கிற்கு : வடிகால் மற்றும் அருவிக்கான ஒதுக்கம் ; தென்மேற்கிற்கு : லொட் 4 ஆகவுள்ள அருவியினூடான ஒதுக்கம் ; வடமேற்கிற்கு : கூறப்பட்ட இல. 1224 எனும் வரைபடத்தின் லொட் 1 ஆகிய இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 7.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்தும் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவே சங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர் புடைய இணைப்புகளுடன் இல. 1224 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A351/154 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வழி மீது பிரவேசிக்கும் மற்றும் மார்க்க உரிமைகளுடனானது :

மேற்கூறப்பட்ட அம்பிட்டியவில் அமைந்த 1999, நவெம்பர் 30 ஆந் திகதி மற்றும் 2002, யூன் 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 2245 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7 (16 அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : ஸ்ரீ தலதா மாளிகையின் தோட்டம் ; கிழக்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டீ. ஜே. நாணயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட 1964, சனவரி 7 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்ட லொட்கள் 8, 10, 11 மற்றும் 24 ; தெற்கிற்கு : லொட் 2, 3, 5 மற்றும் 6 ; மற்றும் மேற்கிற்கு : லொட்கள் 12 மற்றும் 14 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினைந்து தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 15.50பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் இல. 2245 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A351/155 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-692

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0030 5001 3005 - ஆர். ரீ. என். சீ. ரத்துகம

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2005.04.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.11.13 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.10.28 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான மூன்று இலட்சத்து ஐம்பத்துநான்காயிரத்து நானூற்றுப்பத்து ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 3,54,410.71) 2004, ஏப்பிறல் 26 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை மூன்று இலட்சத்து இருபத்தையாயிரத்து

நூற்றைம்பத்தொரு ரூபா எண்பத்தொரு சதம் (ரூ. 3,25,151.81) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 2011.09.12 ஆந் திகதி பி. ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருணாகலை மாவட்டம், குளியாப்பிட்டி பதிவுப்பிரிவிற்குள் கட்டுகம்பொல ஹத்பத்துவையின் யகம்பத்து கோரலேயின் ஹபரவெவ மற்றும் கெக்குனவலையில் அமைந்த ''அட்டம்பகாஹபிட்டிய மற்றும் அம்பலம்கும்புர வெலபில்லேவ'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எப். எச். பெர்ணாண்டோவினால் தயாரிக்கப்பட்ட 1999, யூன் 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 3268 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகளாவன- வடக்கிற்கு : பபிலிஸ் என்பவரின் காணி மற்றும் விமலாவத்தி என்பவரின் காணி ; கிழக்கிற்கு : ஆர். அன்ட்ரூ என்பவரின் வயல் மற்றும் டபிள்யூ. எம். போரலெந்தினா என்பவரின் வயல் ; தெற்கிற்கு : டபிள்யூ. எம். சோமாவத்தி மற்றும் ஏனையோருக்கு சொந்தமான இக்காணியின் எஞ்சிய பகுதி ; மற்றும் மேற்கிற்கு : கம்சபா வீதி (ஆனால் மேலும் திருத்தமாக மேற்கிற்கு : கம்சபா வீதி, பபிலிஸ் என்பவரின் காணி மற்றும் விமலாவத்தி என்பவரின் காணி) இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் ஒன்பது தசம் எட்டு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 9.85பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்துமுடன் குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் ஆர் 73/53 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-693

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0069 1000 1262 - டீ. என். ஜே. இன்டஸ்ட்ரீஸ்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2008.12.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2009.09.11 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2009.09.02 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'' மற்றும் ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினாறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முன்னூற்றைம்பத்துமூன்று ரூபா முப்பத்துநான்கு சதம் (ரூ. 16,19,353.34) 2008, செத்தெம்பர் 24 ஆந் திகதி முதல் இல. 1323 எனும் ஈட்டுமுறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை பதினைந்து இலட்சத்து முப்பத்தோராயிரத்து எழுநூற்றெண்பத்தாறு ரூபா பதினெட்டு சதம் (ரூ. 15,31,786.18) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இல. 1323 இன்மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலமாக 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக 2011.09.12 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், உடுக்கஹ கோரளே தெற்கு, தம்பதெனி ஹத்பத்து, அலவ்வை பிரதேச சபை எல்லைகளுக்குள் பாரமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள ''யாஹாலதெனிய வத்த மெதபொலேவத்த மற்றும் கல்கொடேஹேன'' என்று அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ரத்நாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, நவெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 162/2005 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கிற்கு : குணவர்தனவினால் உரிமம்கோரும் காணி மற்றும் பியசேனவினால் உரிமம்கோரும் காணி ; கிழக்கிற்கு : கிரிஉல்ல வீதி முதல் மிரிஹெலிய வரையான பிரதேச சபை வீதி ; தெற்கிற்கு : லீலாவத்தியினது காணி மற்றும் யத்தாலகொடவினது காணி (ஆனால், நந்தாவத்தி மற்றும் யத்தாலகொடவினது காணி என உறுதியில் குறிப்பிடப்பட்டிருந்தது) ; மற்றும் மேற்கிற்கு : பத்திரண மற்றும் குணவர்தனவினது காணி. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் மூன்று றூட் இருபத்துமூன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 23.5பே.) அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கண் அமைந்த சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவே சங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 162/ 2005 எனும் வரைபடத் திற்கு அமைவாக குருநாகல் காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F 1172/244 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-694/4

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 0086 5000 0863 - பீ. ஏ. ஜீ. டீ. பண்டித்தரத்ன

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2009.11.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.02.19 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2010.02.05 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான பதினாறு இலட்சத்து ஆயிரத்து இருநூற்றறுபத்தைந்து ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூ. 16,01,265.79) 2009, ஒற்றோபர் 8 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை பதினான்கு இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து ஐம்பத்துநான்கு ரூபா முப்பத்தாறு சதம் (ரூ. 14,32,054.36) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம மூலமாக 2011.09.22 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ஹப்பிட்டிகம் கோரலேயின் உடுகாஹா பத்துவையின் மீரிகம பிரதேச சபை (உப அலுவலகம் உடுகாஹா) எல்லைகளுக்குள், போதலே கிராமத்தில் அமைந்த "தெல்காஹவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டீ. மொல்லிகொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, நவெம்பர் 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 1086 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : இல. 4437 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் ஒரு பகுதி (எஞ்சிய பிரதேசம்) ; கிழக்கிற்கு : காஹாட்டகாஹாவத்த ; தெற்கிற்கு : வீதி (அதிவேகத் தெரு) ; மற்றும் மேற்கிற்கு : இல. 4437 எனும் வரைபடத்தில் லொட் 1 இன் ஒரு பகுதி (எஞ்சிய பிரதேசம்). இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்திரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 32பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்தும் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1086 எனும் வரைபடத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் F 296/ 242 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-694/5

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனைகள் ஏல விற்பனை**

கணக்கு இல. 1039 5005 2124 - டபிள்யூ. ஏ. ரோஹன் மற்றும் எப். எச். டீ. சில்வா

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினால் 2011.01.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2011.06.03 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியிலும் 2011.06.01 ஆந் திகதிய "திவயின", "ஜலண்ட்" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐந்நூற்றெழுபத்திரண்டு ரூபா ஐம்பது சதம் (ரூ. 1,29,27,572.50) 2010, செத்தெம்பர் 02 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதிவரை ஒரு கோடியே பதினொரு இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நாற்பத்தைந்து ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 1,11,46,045.12) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்தொரு வீதம் (21%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக்கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி மூலமாக 2011.09.30 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளே இன் அதிகாரி பத்துவின் முல்லேரியாவை கிராமத்தில் கூடலு ஆகரே இல் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். திக்கும்புர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஏப்பிறல் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 1270 எனும் வரைபடத்தில் மீள் அளவீடு செய்யப்பட்ட லொட் 01 இன் உப பிரிவு) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. சேனாநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, மே 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 1912 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 எனக் குறிப்பிடப்பட்ட காணியின்

*எல்லைகளாவன- வடக்கிற்கு : தெப்பா ஆறு; கிழக்கிற்கு : ஜீ. ஏ. திலக்கரத்னவின் காணி; தெற்கிற்கு : லொட்கள் லொட்கள் 04 மற்றும் 09 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 09, இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்ஐந்து தசம் சைபர் பேர்ச்சஸ்கள் (0ஏ. 0ஏ. 15.0பே.) அல்லது 0.0379 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1912 எனும் வரைபடத்திற்கு அமைாக கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் L 125/40 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*கூறப்பட்ட லொட் 3 இன் ஊடாகவும் ஏனைய பொது பாவனையாளர்களுக்கான ஒத்த உரிமைகளைக் கொண்ட வழி மீது மற்றும் ஏனைய மார்க்க உரிமைகளுடனானது. (திரும்புவதற்கான வட்டத்தைக் கொண்ட 15 அடிகள் அகலத்தைக் கொண்ட வீதிக்கான ஒதுக்கம்) மற்றும் 09 (2.5 அடி அகலத்தைக் கொண்ட வடிகாலிற்கான ஒதுக்கம்) இல. 1912 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,*

*கம்பனிச் செயலாளர்.*

*8-694/6*

---

**டிஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்புச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துக்கள் ஏல விற்பனை**

***255 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகு வைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

***அலகு/பகுதி XA/F2/U4 2 ஆம் தட்டு (3 மாடிகள்)***

***வரிமதிப்பு இல. 608/2/4 (முன்னைய வரிமதிப்பு இல. 608/2/4) கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை***

***இடம் : அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் காமினி பி. தொடன்வெல அவர்களால் வரையப்பட்ட 2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 5195 ஆம் இலக்க மாடிக்குடியிருப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் 2 ஆம் மாடி அலகு/பகுதி XA/F2/U4 (C வகை)***

***வதிவிட வீட்டுப் பிரிவில் உள்ள அலகு/பகுதிகள் : இரண்டு படுக்கை அறைகள், வரவேற்புக் கூடம், சாப்பாட்டு அறை, இரண்டு கழிப்பறைகள், சமையலறை, பொதுப் பாவனை அறை, மாடி, வாசல் பகுதி.***

***பொதுப் பாவனைப் பிரதேசம் : CE 51***

***இந்த அலகு/பகுதியின் நிலமட்டப் பரப்பளவு : 75 சதுர மீற்றர்கள்***

***பகிர்வுப் பெறுமதி ஒதுக்கீடு : 53***

***பொதுவான அம்சங்கள் :***

***(1) மாடிக்குடியிருப்பு சொத்தின் உத்தியோகபூர்வ பொது அம்சங்கள் :***

***(i) மாடிக்குடியிருப்பு சொத்திற்கு சேர்மதியான திறந்தவெளி உட்பட கட்டிடம் அமைந்துள்ள காணி***

***(ii) அடிக்கல், தூண்கள், கேடர்கள், பீம்கள், முண்டுகள், பிரதான சுவர்கள், கட்டிடத்தின் கூரை***

***(iii) மின் விநியோகம், தொலைபேசி, வானொலி, ரிடிபியூஷன், தொலைக்காட்சி, நீர் விநியோகக் குழாய், நீர்த்தாங்கி, நீர் கொள்கலன், மேல் நீர்த் தாங்கி, நீர் இறைக்கும் நிலைய உபகரணங்கள், கழிவு நீர்க்குழாய், கழிவுநீர் சந்தி, கழிவுப்பொருள் தொட்டி போன்ற மத்திய சேவைகள்***

***(iv) மேற்குறிப்பிட்ட சொத்தின் நிலைப்பாடு, பரா மரிப்பு, பாதுகாப்பு அல்லது பொதுவான பாவனைக்குத் தேவையான ஏனைய சகல வசதிகளும் பொருட்களும்***

***(2) 255 ஆம் இலக்க பிணை உறுதியில் உள்ள அட்டவணை யில் மேலும் விபரிக்கப்பட்ட பொதுவான அம்சங்களும்.***

*(பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். அபேவிக்கிரம அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 5 ஆந் திகதியிடப்பட்ட 255 ஆம் இலக்க முதன்மை பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசில் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த மாத்தறையில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள (இதன் பின்னர் கம்பனி என அழைக்கப்படும்) சமந்த ஜயவிக்கிரம அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் டிஎப்சீசீ வங்கிக்கு அடவு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

டிஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;

(2) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 12% வற் வரி (பன்னிரண்டு சதவீதம்) ;

(3) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;

(4) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) ;

(5) மொத்த விளம்பரச் செலவு ரூ. 56,000 ;

(6) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;

(7) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2440366/ 77 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம்கொண்ட நூற்றாண்டுக்கும்
மேல் மக்கள் நன்மதிப்புப் பெற்ற, இலங்கையின்
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணித்தரகர்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

8-671

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – பலாங்கொடை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**காணிகள் ஏல விற்பனை**

**சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி கிராமசேவகர் பகுதி கொரக்காமட கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயக வரைபட இலக்கம் 620075 இல் காண்பிக்கப்பட்ட துண்டு 29 (காணித்துண்டு 2) மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.**

**(விஸ்தீரணம் : ஹெக்டயார் 0.0981)**

*(கடன் எடுத்த/காணியை ஈடுவைத்த அப்துல் அசீஸ் மொகமட் ரசாக்டீன் மற்றும் மொகமட் நசீம் பாத்திமா ரிஸ்வானா மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்.)*

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. (பதிவு இலக்கம் பீகியு 116) இன் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட காணிகள் 2011, செத்தெம்பர் 16 ஆந் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்கப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2011.05.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2011.05.20 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 2011.08.26 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2011.08.30 ஆந் திகதியுடைய "லக்பிம", "வீரகேசரி" மற்றும் "த ஐலண்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- பலாங்கொடையில் இருந்து கல்தொட்ட றோட் ஊடாக ஸ்ரீ குணானந்த மாவத்தை (காட்டபிட்டிய றோட்) சென்று இந்த றோட்டில் சிறிது தூரம் சென்று முஸ்தபா மாவத்தையில் இடதுபக்கம் உள்ள றோட்டில் சென்ற பிறகு இந்தக் காணி வலதுபக்கம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அல்லது பலாங்கொடை கிளை" இல் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 27, ஹறப்புத்தளை றோட், பலாங்கொடை. தொலைபேசி இல. : 045-2286697/045-2286747 ; தொலைநகல் இல. : 045-2286700.

எல். பி. சேனநாயக்க,
சமாதான நீதவான், மூத்த உத்தரவுபெற்ற
ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி : 011-3144520.
பெக்ஸ் : 2445393.

8-628

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – பலாங்கொடை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணிகள் ஏல விற்பனை**

**சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி கிராமசேவகர் பகுதி கொரக்காமட கிராமத்தில் அமைந்துள்ள வரைபட இலக்கம் 620075 இல் காண்பிக்கப்பட்ட காணித்துண்டு 30 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள் எல்லாம் சேர்த்து.**

**(விஸ்தீரணம் : ஹெக்டயார் 0.1040)**

*(கடன் எடுத்த ஆர். எஸ். ஜெம்ஸ் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் அப்துல் அஸீஸ் மொகமட் ரசாக்டீன் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத் துள்ளார்.)*

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. (பதிவு இலக்கம் பீகியு 116) இன் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்கூறப்பட்ட காணி 2011, செத்தெம்பர் 16 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2011.05.20 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2011.05.23 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 2011.08.26 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2011.08.29 ஆந் திகதியுடைய ''லக்பிம'', ''வீரகேசரி'' மற்றும் ''த ஐலண்ட்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- பலாங்கொடையில் இருந்து கல்தொட்ட றோட் ஊடாக ஸ்ரீ குணானந்த மாவத்தை (காட்டபிட்டிய றோட்) வரை சென்று இடதுபக்கம் உள்ள றோட்டில் சிறிது தூரம் சென்ற பிறகு இந்தக் காணி வலதுபக்கம் உள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் ''கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ அல்லது பலாங்கொடை கிளை'' இல் செலுத்த வேண்டும்.

*வேறு விபரங்களுக்காக.*- முகாமையாளர், கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 27, ஹப்புத்தளை றோட், பலாங்கொடை. தொலைபேசி இல. : 045-2286697/045-2286747 ; தொலைநகல் இல. : 045-2286700.

எல். பி. சேனநாயக்க,
சமாதான நீதவான், மூத்த உத்தரவுபெற்ற
ஏலதாரர், விலைமதிப்பிடுநர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி : 011-3144520.
பெக்ஸ் : 2445393.

8-629

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.